வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 30.8.2024 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இந்தியாவின் நிதி தொழில் நுட்பங்கள், உலக அளவில் மக்களின் வாழ்க்கையை எளிதாக்கும் என்று, பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மும்பையில், ஃபின்-டெக் திருவிழாவில் கூறினார்.
- பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று பிற்பகல், மகாராஷ்டிர மாநிலம் பால்கார் மாவட்டத்தில் 76 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில், வாத்வான் துறைமுகம் அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.
- பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை பிற்பகல் காணொளி காட்சி மூலம், சென்னை-நாகர்கோவில் வந்தே பாரத் உட்பட, 3 வந்தே பாரத் ரயில்களை, கொடி அசைத்து தொடக்கி வைக்கிறார்.
- புதுச்சேரியில், ஸ்வாநிதி திருவிழா மற்றும் PRAISE பரிசளிப்பு விழாவை, இன்று மாலை, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ் நாதன் தொடக்கி வைக்கிறார்.

<u>மோடி-மும்பை</u>

இந்தியாவின் நிதி தொழில் நுட்பங்கள், உலக அளவில் மக்களின் வாழ்க்கையை எளிதாக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். இன்று மும்பையில் உலக அளவிலான சிறப்பு ஃபின்-டெக் திருவிழாவில் உரையாற்றிய அவர், இந்தியாவில் நிதி தொழில் நுட்பங்கள் ஏற்கப்பட்ட வேகமும், அளவும் ஈடு- இணையற்றவை என்றும், தற்போது உலகின் 50 சதவிகித டிஜிட்டல் பணப் பரிவர்த்தனைகள், இந்தியாவில் தான் நிகழ்வதாகவும் கூறினார். நிதி சேவைகளை, ஜனநாயக

மயமாக்குவதில், ஃபின்-டெக் தொழில் நுட்பங்கள், முக்கிய பங்காற்றி இருப்பதாக பிரதமர் தெரிவித்தார். டிஜிட்டல் பணப் பரிமாற்ற வசதிகளால், தேசிய நோக்கங்களுக்கு எதிரான இணைப் பொருளாதாரத் தொல்லை நீங்கி இருப்பதாகவும், வங்கிக் கட்டமைப்பில். வெளிப்படைத் தன்மை அதிகரித்து இருப்பதாகவும் அவர் கூறினார். இதுவெறும் தொழில் நுட்ப மாற்றம் அல்ல என்றும், டிஜிட்டல் மயத்தினால் சமூகத்தில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் மிக ஆழமானவை என்றும் அவர் குறிப்பிட்டார். நிதி தொழில் நுட்பத்தில் ஏற்பட்டுள்ள அண்மைக்கால புதுமைகளை வெளிப்படுத்தும் வகையில், உலக ஃபின்-டெக் திருவிழாவின் ஒருபகுதியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கண்காட்சியையும், பிரதமர் பார்வையிட்டார். இந்திய பணப் பட்டுவாடா கவுன்சில், இந்திய தேசிய பணப் பட்டுவாடா கழகம் உள்ளிட்ட அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்துள்ள உலக ஃபின்-டெக் திருவிழாவில், இந்தியா மற்றும் பல்வேறு வெளிநாடுகளில் இருந்து, வங்கியாளர்கள், கல்வியாளர்கள், தொழில் துறையினர், ஒழுங்குமுறை அதிகாரிகள், மற்றும், கொள்கை வகுப்பாளர்கள் உட்பட சுமார் 800 பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர். தொடக்க விழாவில் ரிசர்வ வங்கி ஆளுநர் திரு சக்தி காந்த தாஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

*<u>மோடி-பால்கார்</u>*

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று பிற்பகல், மகாராஷ்டிர மாநிலம் பால்கார் மாவட்டத்தில் 76 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில், வாத்வான் துறைமுகம் அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். ஆயிரத்து 560 கோடி ரூபாய் மதிப்பிலான 218 மீன்வளத் திட்டங்களையும், 13 கடலோர மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 1 லட்சம் மீன்பிடி படகுகளில் மொத்தம் 364 கோடி ரூபாய் செலவில் தொலைத் தொடர்பு டிரான்ஸ்பான்டர் பொருத்தும் திட்டத்தையும் பிரதமர் தொடக்கி வைத்தார். மீனவர்களுக்கு கிசான் கடன் அட்டைகளை அவர் வழங்கினார்.

கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவின் கடற்கரைப் பகுதி,முன் எப்போதும் இல்லாத அளவில் வளர்ச்சி கண்டுள்ளதாக பிரதமர் தமது உரையில் தெரிவித்தார். தமது அரசு பல லட்சம் கோடி ரூபாய் செலவில், பல துறைமுகங்களை நவீனமாக்கி, பல்வேறு நீர்வழிப் பாதைகளை மேம்படுத்தி இருப்பதாகவும், தனியார் முதலீடுகளும் அதிகரிக்கப் பட்டுள்ளதால் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உட்பட பல்வேறு நன்மைகள் கிடைத்திருப்பதாகவும் அவர் கூறினார். புதிதாக அமைய உள்ள வாத்வான் துறைமுகத்தினால் பிராந்தியத்தின் ஒட்டுமொத்த பொருளாதார சூழலே மாறிவிடும் என்றும் இன்றைய தினம் இந்தியாவின் வளர்ச்சிப் பாதையில் வரலாற்று முக்கியத் துவம் வாய்ந்த நாள் என்றும் பிரதமர் குறிப்பிட்டார். இந்தியாவின் முக்கிய கடல்சார் தலைவாசலாக, மகாராஷ்டிர மாநிலத்தில் அமைய உள்ள வாத்வான் துறைமுகத்தில், பெரிய கண்டெய்னர் கப்பல்கள் மற்றும் மிகப் பெரிய சரக்கு கப்பல்களை கையாளும் வசதிகள் இடம் பெறும் என்பதும், இதனால் நாட்டில் வர்த்தகம் மற்றும் பொருளாதார வளர்ச்சி மேம்படும் என்பதும் குறிப்பிடத் தக்கது.

***<u>மோடி-நீதிமன்றம்</u>***

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை புதுடெல்லி பாரத் மண்டபத்தில், மாவட்ட அளவிலான நீதித் துறையினரின் தேசிய மாநாட்டை தொடக்கி வைக்கிறார். உச்சநீதிமன்றம் நிறுவப் பட்டதன் 75 ஆண்டுகளை குறிக்கும் வகையிலான நினைவு தபால் தலை மற்றும் நாணயத்தையும் பிரதமர் வெளியிடுகிறார். உச்சநீதிமன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த 2 நாள் மாநாட்டில் உள்கட்டமைப்பு, பாதுகாப்பு, பயிற்சி உட்பட மாவட்ட நீதிமன்றங்களின் பல்வேறு பிரச்சனைகள் குறித்து 5 அமர்வுகள் இடம் பெற உள்ளன. மாநாட்டின் தொடக்க விழாவில் மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சரும், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி உள்ளிட்டவர்களும் பங்கேற்கிறார்கள்.

## <u>மோடி-வந்தே பாரதம்</u>

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை பிற்பகல் காணொளி காட்சி மூலம், 3 வந்தே பாரத் ரயில்களை, கொடி அசைத்து தொடக்கி வைக்கிறார். சுயசார்பு இந்தியா மற்றும் இந்தியாவில் தயாரிப்போம் இயக்கத்தின் நோக்கங்களுக்கு ஏற்ப, முற்றிலும் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டுள்ள இந்த அதி நவீன ரயில்கள், சென்னை-நாகர்கோவில், மதுரை-பெங்களூர், மற்றும், மீரட்-லக்னோ பிரிவுகளில் இயக்கப்படும். இப்புதிய வந்தே பாரத் ரயில்களால், தமிழ்நாடு, கர்நாடகா, மற்றும் உத்தரபிரதேஷ் மக்களுக்கு, உலகத் தரம் வாய்ந்த போக்குவரத்து வசதிகள் கிடைக்கும் என்றும், வர்த்தக சமூகத்தினர், மாணவர்கள் உட்பட அடிக்கடி பயணம் செய்யும் அனைத்து பிரிவினரின் தேவைகள் திறம்பட்ட முறையில் பூர்த்தியாகும் என்றும் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## <u>ஜிதேந்திரா ஓய்வூதியம்</u>

பணியில் இருந்து ஓய்வு பெறும் மத்திய அரசு ஊழியர்களின் ஓய்வூதிய நடைமுறைகளை எளிமையாக்கும் நோக்கத்திலான, புதிய, ஒற்றை ஓய்வூதிய விண்ணப்ப படிவத்தை, மத்திய பணியாளர் துறை இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் இன்று புதுடெல்லியில், காணொளி காட்சி மூலம் வெளியிட்டார். ஓய்வூதியர்களுக்கான பவிஷ்யா இணைய தளத்தை, மனித வள மேலாண்மைக்கான, e-HRMS கட்டமைப்புடன் ஒருங்கிணைத்து செயல்படுத்தும் நடைமுறைகளையும் அவர் தொடக்கி வைத்தார்.

ஓய்வூதியர்கள் உட்பட அனைத்து மக்களின் வாழ்க்கையை எளிதாக்குவதே அரசின் நோக்கம் என்று நிகழ்ச்சியில் பேசுகையில் அமைச்சர் கூறினார். ஓய்வூதிய விண்ணப்பத்திற்கான 9 படிவங்கள் தற்போது ஒரே படிவமாக மாற்றப்பட்டுள்ளதாக பணியாளர் துறை செயலர் திரு விவேக் ஜோஷி தெரிவித்தார். இனி ஓய்வூதிய விண்ணப்பத்தின் நடப்பு நிலையை

விண்ணப்பதாரர்கள் உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும் என்று ஓய்வூதியத் துறைச் செயலர் திரு வி ஸ்ரீனிவாஸ் கூறினார்.

<u>ஸ்வாநிதி</u>

புதுச்சேரியில், ஸ்வாநிதி திருவிழா மற்றும் PRAISE பரிசளிப்பு விழாவை இன்று மாலை முதலமைச்சர் திரு ரங்கசாமி முன்னிலையில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ் நாதன் தொடக்கி வைக்கிறார். கடற்கரை சாலை காந்தி திடலில் செப்டம்பர் 1-ஆம் தேதி வரை நடைபெற உள்ள இவ்விழாவில், சாலையோர வியாபாரிகளின் உணவுத் திருவிழா, மகளிர் சுயஉதவிக் குழுவினரின் பொருட்காட்சி, ஸ்வாநிதி கடன் மேளா, டிஜிட்டல் பணப் பரிவர்த்தனை பற்றிய பயிற்சி முகாம், மற்றும், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற உள்ளன.

சாலையோர வியாபாரிகளுக்கான பிரதமரின் ஸ்வாநிதி திட்டத்தின் அமலாக்கத்தில் சிறப்பாக பங்களித்தவர்களுக்கான மத்திய அரசின் PRAISE விருது தேசிய அளவிலும், மாநில அளவிலும் 2 நிலைகளில் வழங்கப்படுகிறது. கடந்த ஜூலை 18-ஆம் தேதி நடைபெற்ற தேசிய அளவிலான விருது வழங்கும் விழாவில், ஸ்வாநிதி திட்டத்தின் அமலாக்கத்தில் யூனியன் பிரதேசங்களுக்கு இடையில் இரண்டாமிடம் பெற்றதற்கான விருது, புதுச்சேரி அரசுக்கு வழங்கப்பட்டது. புதுச்சேரி அரசின் உள்ளாட்சி துறை இயக்குநர் திரு சக்திவேல், மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு மனோகர்லாலிடம் இருந்து இந்த விருதைப் பெற்றுக் கொண்டார். இதைத் தொடர்ந்து அமைச்சகம், மாநில அளவில் 831 வெற்றியாளர்களை அறிவித்து, அந்தந்த மாநிலங்களில் விருது வழங்கும் விழாக்களை நடத்த அறிவுறுத்தியதைத் தொடர்ந்து, புதுச்சேரியில் PRAISE பரிசளிப்பு விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## கருணைத் தொகை

புதுச்சேரியில் இம்மாதம் 8-ஆம் தேதி கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட, ஜீவானந்தபுரம் பகுதியைச் சேர்ந்த ஐயப்பன் என்பவரின் குடும்பத்திற்கு முதலமைச்சர் நிவாரண நிதியில் இருந்து 6 லட்சம் ரூபாய் கருணைத் தொகை, மற்றும், வருவாய் துறை மூலமான 4 லட்சம் ரூபாய் நிவாரணம் இரண்டும் சேர்த்து, மொத்தம் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையை, இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி, ஐயப்பன் மனைவி திருமதி புனனேஸ்வரியிடம் வழங்கினார். சட்டப் பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வின் போது, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு வைத்திநாதன், திரு ராமலிங்கம், மாவட்ட துணை ஆட்சியர் திரு அர்ஜுன் ராமகிருஷ்ணன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

## மூப்பனார்

மக்கள் தலைவர் ஜிகே மூப்பனார் நினைவு நாள் புதுச்சேரி அரசு சார்பில் இன்று அனுசரிக்கப்பட்டது. மரப்பாலம் சந்திப்பில் உள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு, சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், அமைச்சர்கள் திரு லட்சுமி நாராயணன், திரு சாய் சரவணன் குமார், அரசுக் கொறடா திரு ஏகேடி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு பாஸ்கர் என்கிற தட்சிணாமூர்த்தி, திரு லட்சுமிகாந்தன், ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர். பின்னர் சதுக்கத்தின் கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த மூப்பனாரின் திருவுருப் படத்திற்கும் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

**தன்கர்**

பெண்களின் பங்கேற்பு இல்லாமல் நாடு, விரும்பிய வளர்ச்சியை எட்ட முடியாது என்று குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் கூறி உள்ளார். முன்னேறிய இந்தியாவில் பெண்களின் பங்கு என்பது குறித்து டெல்லி பல்கலைக் கழகத்தின் பாரதி கல்லூரியில் இன்று நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில் அவர் பேசுகையில், நன்கு பக்குவப்பட்ட, முறைப்படியான, நவீன பொருளாதாரமாக இந்தியா மேம்பட்டு வருவதாகவும் இதில் பெண்களின் பங்கு மிக முக்கியமானது என்றும் கூறினார். அதேசமயம் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத சமூகம், நாகரீக சமூகமே அல்ல என அவர் குறிப்பிட்டு, கொல்கத்தா பெண் டாக்டர் கொலை குறித்து வேதனை வெளியிட்டார்.

வலுவான தொழிற் சூழலை உருவாக்கும் பாதையில் நாடு பயணித்து வருவதாகவும், குடிநீர், மின்சாரம், கழிவறை மற்றும் கேஸ் இணைப்புடன் கூடிய வீடுகளைப் பெற்று, வாழ்க்கை தரத்தில் மக்கள் முன்னேறி வருவதாகவும் குடியரசு தலைவர் கூறினார். 10 ஆண்டுகளுக்கு முன்னர் பலவீனப் பொருளாதாரங்களில் ஒன்றாக இருந்த இந்தியா தற்போது உலகின் 5 முன்னணிப் பொருளாதாரங்களில் ஒன்றாக மேம்பட்டு இருப்பதை அவர் சுட்டிக்காட்டினார். பருவநிலை மாற்றத்தால் உலகின் இருப்பிற்கே ஆபத்து உருவாகி இருப்பதால் மக்கள், குறிப்பாக மாணவர்கள், மரங்களை அதிக அளவில் நட்டு, பூமியை பாதுகாக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

**வானிலை**

நேற்று வங்ககடல் பகுதியில் உருவான காற்றழுத்த தாழ்வுப் பகுதி, இன்று, மத்திய மேற்கு அதனை ஒட்டிய வடமேற்கு வங்க கடல் பகுதிகளில், ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக நிலவுகிறது. இது அடுத்த 36 மணி நேரத்தில், மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, வடக்கு ஆந்திரா மற்றும் தெற்கு ஒடிசா

கடற்கரையை நோக்கி நகரக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றைய தினம், தமிழகத்தில் ஒருசில இடங்களிலும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் மிதமான மழையும், மணிக்கு 40 கிலோ மீட்டர் வரையிலான வேகத்தில் வலுவான தரைக்காற்றும் எதிர்பார்க்கப்படுகிறது. கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல் மற்றும் நெல்லை மாவட்டங்களின் மலைப் பகுதிகளிலும், நீலகிரி, சேலம், ஈரோடு, தர்மபுரி, கிருஷ்ணகிரி, தென்காசி மற்றும் குமரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களிலும் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. செப்டம்பர் 5-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழக கடலோரப் பகுதிகள் மற்றும் வங்ககடல் பகுதிகளில் பலத்த சூறாவளி காற்று வீசக் கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

*<u>பாரா லிம்பிக்ஸ்</u>*

பாரீசில் நடைபெறும் பாரா லிம்பிக்ஸ் போட்டிகளின் துப்பாக்கி சுடும் பிரிவில் இந்தியாவின் அவினி லேக்கரா தங்கப் பதக்கமும், மோனா அகர்வால் வெண்கலப் பதக்கமும் வென்றுள்ளனர். ஆடவர் ஒற்றையர் பேட்மிண்டன் பிரிவில், இந்தியாவின் நிதேஷ்குமார் சீன வீரரை தோற்கடித்து அரை இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றார்.